**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 155/2025 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அழகம்மை | த–பெ /க.பெ. | பிரகாஷ் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 38/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2026**

-------------------------------------------------------------------------------------------------

**10.06.2026**

**முதல் விசாரணை:**

1) எனக்கு புகார்தாரரை எனது தந்தை மூலமாக தெரியும். புகாரில் சொன்னவாறு எங்கள் வீட்டில் இருந்து பீரோ எதுவும் வாங்கி விற்பனை செய்யவில்லை. 24.01.2021 எதிரி எனக்கு ரூ.60,000/–மட்டுமே கொடுத்தார். மாதம் 3 சதவீத வட்டிக்காக பணம் கொடுத்தார். எனது தங்கை திருமணம் 25.01.2021ல் இருந்ததால் அதற்கான அவசர தேவைக்காக புகார்தாரரிடம் இருந்து பணம் பெற்றேன். 2 1/2 வருடம் மாத வட்டி சரியாக செலுத்திவந்தேன். அதன் பின்பு அசல் தொகையை முழுமையாக பெற்றுக்கொள்ளும்படி கூறினேன். அதன்படி 4 தவணையில் அசல் தொகையை புகார்தாரருக்கு கொடுத்துவிட்டேன். அசல் கொடுப்பதற்கு முன்பு 6 மாத வட்டி நிலுவையில் இருந்தது. அதற்கான தொகைபுகார்தாரர் கேட்டுக்கொண்டதால் அவரது மகனுக்கு G–Pay மூலம் செலுத்தியுள்ளேன். ( **2023 வருடத்திற்கான 6 G–Pay பரிவர்த்தனை எ.ம.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது ( Subject to section 63 certificate )** அதன் பின்பு அசல் தொகையை முழுவதுமாக புகார்தாரருக்கு கொடுத்துவிட்டேன். அதற்கு பின்பு மீண்டும் புகார்தாரரிடம் ரூ.50,000/– எனது அவசர தேவைக்காக கேட்டிருந்தேன். அதற்கு வழக்கு காசோலை மற்றும்

புரோநோட் கையொப்பம் செய்த நிரப்பாமல் 2024 டிசம்பரில் பெற்றுக்கொண்டார். ஆவணங்களை பெற்ற பின்பு புகார்தாரர்எனக்கு எந்த ஒரு பதிலும் அளிக்கவில்லை, நான் கேட்ட தொகை ரூ.50,000/- கொடுக்கவில்லை அதன் பின்பு 2025 ஏப்ரல் எதிரி என் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு பணத்தை தருவதாக கூறினார், அப்போது மாதம் 6 சதவீத வட்டி என அதிக வட்டி தொகை கேட்டார். அதற்கு நான் ஒத்துக்கொள்ளவில்லை, எனது புரோநோட் மற்றும் காசோலையை கேட்டேன். புகார்தாரரின் கடையை தேடிச்சென்றேன், ஆனால் அவர் கடை எதுவும் புகார்தாரர் சொன்னவாறு இல்லை. புகார்தாரர் எனக்கு சரியாக பதில் அளிக்கவில்லை. புகார்தாரர் இறுதியாக பேசிய ரெக்கார்டிங் என்னிடம் உள்ளது. புகாரில் குறிப்பிட்டுள்ள தேதியில் புகாரில் சொன்னவாறு நான் ரூ.80,000/- பெறவில்லை. வழக்கு காசோலை மற்றும் புரோநோட்டை நான் நிரப்பவில்லை, நிரப்பாமல்தான் கொடுத்தேன். 2024 ல் பெற்ற கடனுக்கு அசல் கொடுக்கும் காலத்தில் உள்ள வட்டி தொகையான ரூ.18,000/- எனது காசோலையை புகார்தாரர் வைத்துக்கொண்டு தர மறுத்துள்ளார். புகாரில் சொன்னவாறு 2025 ல் நான் எந்த ஒரு கடனும் பெறவில்லை. எனது புரோநோட் மற்றும் காசோலையை தவறாக பயன்படுத்தி புகார் தாரர் என் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு காசோலை தொகையை கொடுக்க நான் சட்டப்படி கடமைபட்டவர் இல்லை.

**(பிரிவு 63 சான்றிதழ் தருவதற்காக காலம் கேட்டதால் ஒத்தி வைக்கப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.10 09:16:43 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.